# 10 தூய ஆவியின் அருட்கொடைகள்

**1 கொரிந்தியர் 12:4-11**

தூய ஆவியினால் எமக்கு வழங்கப்பட்டுள்ள அருட் கொடைகளை அறிந்து அவற்றைப் பிறர் நலனுக்காக பயன்படுத்தக் கூடிய வழிமுறைகளை இப்பாடம் மூலம் ஆராய்வோம்.

சிறுவர், இளைஞர், வயோதிபர் அன்பளிப்பு எனும் அருட்கொடையை பெறுவதற்கு விரும்புவர். பிறந்தநாள், திருமணம் போன்ற விழாக்களில் பரிசுகளை வழங்குதல் வழக்கம்.

மானிடர் இறைவனிடமிருந்து பெற்ற மிகப் பெறுமதிமிக்க பரிசு மனித உடல் ஆகும். பல அவயவங்களை உடைய மனித உடலானது இறைமகிமையைப் பிரதிபலித்தல் செயல்முறை அடையாளம் ஆகும். உடலுடன் தொடர்பான பல அவயவங்கள் சக்கர சுழற்சிக் கோலமாகச் செயற்படுகின்றன. பல அவயவங்கள் உடலின் வாழ்வுச் செயல்களுக்காகவே செயற்படுகின்றன. அவ்வாறு ஒரே தூய ஆவியால் எமக்குப் பலவித அருட்கொடைகள் அருளும் வகைகளை உருவப்படத்தில் நோக்குவோம்.



இவ்வாறாக மானிடரையும் சபையையும் ஆன்மீகத்தில் வலுவூட்ட ஒரே ஆண்டவரால் ஒரே தூயாவியானவர் மூலமாக பல்வேறு ஆன்மீகக் கொடைகள் அளிக்கப்பட்டுள்ளன.

**வாசிப்போம்**
**1 கொரிந்தியர்**
**12.4-11**

மேற்படி பல்வேறு ஆன்மீகக் கொடைகள் தூய ஆவியானவரால் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறாக வழங்கப்பட்டுள்ளன. இவைகள் இறை உறவினால் இறை கருணையுடன் கிடைத்தவைகள் அன்றி எமது ஆற்றலால் கிடைத்தவை அல்ல.

அருட்கொடைகள் பிறரை வலுவூட்டவும் திரு அவைகளைப் பலப்படுத்தவும் எமக்கு அளிக்கப்பட்டுள்ளன. எல்லாக் கொடைகளிலும் சமமான பெறுமதி காணப்படுவதுடன் எல்லோருக்கும் ஏதாவது கொடை வழங்கப்பட்டுள்ளதை அறிந்துகொள்ள வேண்டும்.

அருட்கொடைகள் தூய ஆவியால் எமக்கு அருளப்பட்டுள்ளன என்பதை ஏற்றுக் கொண்டு, அவற்றை அறிந்து கொள்ளல் கிறிஸ்தவரின் கடமை ஆகும்.

அருட்கொடைகளை தனித்தனியாக ஆராய்வோம்.

### தூய ஆவியால் ஞானம் நிறைந்த சொல்வளம்

ஒருவர் பிரச்சனைகள் மத்தியில் வாழும் வேளையில், பிரச்சினைகளை வெற்றி காண் பதற்குரிய வழி வேறு ஒரு நபருக்கு தூய ஆவியானவரின் வழிகாட்டலும் அறிவு ரையும் மூலம் கிடைத்தல் எனக் கருதப்படுகின்றது.

### அறிவு செறிந்த சொல்வளம்

பிறருக்கு, இறையியலைச் சரியாக விளக்கிக் கூற தூய ஆவியானவரிடமிருந்து ஞானம் கிடைத்தல் என இங்கு கருதப்படுகின்றது.

### தூய ஆவியானவரில் நம்பிக்கை

நாள்தோறும் கிறிஸ்தவ வாழ்வில் காணப்படும் விசுவாசம் என இது பொருள்படும். அந்த விசுவாசத்தை நிறைவேற்ற எமக்கு தூய ஆவியானவர் ஆற்றல் அளிக்கின்றார்.

### பிணி தீர்க்கும் அருட்கொடை

இயேசு பன்னிரு திருத்தூதரை நற்செய்திப் பணிக்காக அனுப்பும் வேளையில் தூய ஆவியின் வல்லமையை அருளினார். தூய ஆவியானவரால் உடல், உள, ஆத்மீகம் என்பவற்றுக்கு பூரண சுகம் கிடைக்கின்றது. எவ்வித நோய்களையும் குணமாக்கி மக்களுக்கு ஆறுதல் வழங்க மேற்படி கொடை தூயாவியானவரால் வழங்கப்படுகின்றது.

### வல்ல செயல் செய்யும் ஆற்றல்

விசுவாசம் மற்றும் வல்லமையான ஜெபம் மூலமாக பலப்படுத்தப்படல் தூய ஆவியின் கொடையாகும். பல்வேறு சந்தர்ப்பங்களில் இறை வல்லமையை அறிவித்தல் இந்த அருட்கொடையால் நிறைவேற்றப்படுகின்றது.

### இறைவாக்குரைக்கும் ஆற்றல்

தற்காலத்தில் நடைபெறுபவைகளை அவதானமாக ஆராயும்போது இறை வெளிப்பாட்டின் மூலமாக எதிர்காலத்தில் ஏற்படும் நிகழ்வுகளைக் கூறும் ஆற்றல் இறைவாக்குரைப்பவர்களுக்கு வழங்கப்பட்ட மகத்தான ஆசியாகும்.

### ஆவிக்குரியவற்றை பகுத்தறியும் ஆற்றல்

தவறான போதனைகளால் வழிதவறிப் போகாதவாறு உண்மையான இறையியல் கருத்துகளை அறியவும், அறிவிக்கவும் இந்த அருட்கொடை முக்கியம். கடவுளைப் பற்றி, திருச்சபையைப்பற்றி சரியாக விளங்கிக்கொள்வதற்கு இது உதவுகின்றது.

### பலவகை மொழிகளைப் பேசும் ஆற்றல்

இறைவனால் மானிடருக்கு அருளப்படும் சிறப்பான ஆற்றல் இதுவாகும். ஆன்மீக துறையில் சபையைப் பலப்படுத்துவதற்கு வழங்கப்படுகின்றது. இந்த ஆற்றல் திருத்தூதர் பணி நூல் 2:4-11 குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதல் கிறிஸ்தவ சபையின் ஆரம்ப தினத்தில் தூய ஆவியானவரின் வருகையின் வேளையில் எருசலேம் மேலறையில் இடம்பெற்றது.

### பிறமொழிகளை விளக்கும் ஆற்றல்

பிற மொழி பேசினாலும் அதனை விளங்க முடியாவிட்டால் அதனால் பயனில்லை தூய ஆவியானவரால் வழங்கப்பட்ட இன்னுமொரு ஆற்றல் பிற மொழி பேசுதல் ஆகும். இறைவன் தரும் செய்தி, இறைவாக்குகளை சபைக்கு விளக்குதல் இதன் நோக்கமாகும்.

மேற்படி அனைத்து அருட்கொடைகளுக்காக இறைவனுக்குத் துதி செலுத்துதல் எமது கடமை ஆகும். ஒருவரையொருவர் பலப்படுத்தி சபையை வலுப்படுத்திக் கட்டியெழுப்புவதற்காக தூய ஆவியானவர் இவ்வாறான பலவித அருட்கொடைகளை எமக்கு வழங்கியுள்ளார்.

தூய ஆவியானவரின் அருட்கொடைகளை இறைவேண்டல் மூலம் அறிந்துகொள்ள வேண்டும். இவ்வாறான அருட் கொடைகள் திரு அவையினால், எமக்குக் கிடைத்துள்ளது என ஆவியானவரால் உறுதிப்படுத்தலுடன் தூய ஆவியானவரின் கொடை உறுதிப்படுத்தப்படுகின்றது.

எனவே நாம் தூய ஆவியின் கொடைகளால்

- சபையைக் கட்டியெழுப்புவோம்.
- பாவத்தையும் தீய செயல்களையும் எதிர்ப்போம்.
- ஒன்றிணைந்த மக்களை உருவாக்குவோம்
- இறைவனைக் கௌரவப்படுத்துவோம்.

## செயற்பாடு

1. இந்த பாடத்தில் நீங்கள் கற்ற தூய ஆவியின் அருட்கொடைகளை வரிசைப்படுத்துக.
2. மேற்படி தூய ஆவியின் கொடைகளில் உம்மிடம் காணப்படும் கொடையை அறிந்து அதனைப் பிறர் நலனுக்காகப் பயன்படுத்தும் முறைகளை விளக்குக.